ஏப்ரல் 14

மனன வசனம்

**நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிற வனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன். வெளி 3:21.**

ஆராய்ச்சிக்கு

*1கொரி 10:1-11; வெளி 12:1-17; வெளி 19:11-15; எபே 1:20; வெளி 11:19: வெளி 1:10-18.*

ஏப்ரல் 14 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

பாடம் 3

# இயேசுவும் வெளிப்படுத்தல் புத்தகமும்



புதிய ஏற்பாடு நேரடியாக பழைய ஏற்பாடுடன் தொடர்புடையது. புதிய ஏற்பாட்டை மேலோட்டமாக வாசித்தாலே இந்த முக்கிய உண்மை தெரியவரும். நற்செய்திப் புத்தகங்களும் நிருபங்களும் பழைய ஏற்பாட்டுச் சம்பவங்களையும் மேற்கோள்களையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ அடிக்கடி சுட்டிக் காட்டுகின்றன. மேலும், இயேசுவும் தம்மைப்பற்றியும் தம் ஊழியம்பற்றியும் சொன்னபோது 'வேதவாக்கியங்கள்' 'நிறைவேறவேண்டும்' என்று அடிக்கடி சுட்டிக் காட்டினார். மத் 26:54,56; மாற்கு 14:49; யோவான் 13:18; 17:12.

வெளிப்படுத்தல் புத்தகமும் அப்படித்தான். பழைய ஏற்பாடு இல்லாமல், குறிப்பாக தானியேல் புத்தகம் இல்லாமல் இதைப் புரிந்துகொள்ள முடியாது. இரண்டு புத்தகங்களையும் சேர்த்தே ஆராய்வதற்கு இதுவும் ஒரு காரணம்.

வேதாகமத்தின் மற்ற புத்தகங்களின் உதவியுடன் வெளிப்படுத்தலில் உள்ள பழைய ஏற்பாட்டு வசனங்களை ஆராய்ந்தால், இயேசுவை அவ்வசனங்கள் வெளிப்படுத்துவதைக் காணலாம். இது வெளிப்படுத்தல் புத்தகத்தின் முக்கிய அம்சம் ஆகும்; அதாவது, இயேசு யார்? தம் மக்களுக்காக அவர் என்ன செய்திருக்கிறார்? கடைசிக்காலத்தில் நமக்காக அவர் என்ன செய்யப்போகிறார்? இவற்றையே வெளிப்படுத்தல் கூறுகிறது. கடைசிக்கால நிகழ்வுகள் எதுவானாலும் அதில் இயேசுவைத்தான் மையப்படுத்த வேண்டும்; அதையே வெளிப்படுத்தல் செய்கிறது. வெளிப்படுத்தல் புத்தகம் சொல்கிற இயேசுபற்றி இந்த வாரம் படிப்போம்.

*2018, ஏப்ரல் 21 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

ஞாயிறு, ஏப்ரல் 15

## வெளிப்படுத்தலின் அமைப்பு

தானியேல், வெளிப்படுத்தலில் இரு முக்கிய பிரிவுகள் உள்ளன:

**1 வரலாற்று நிகழ்வுகள்** **2 கடைசிக்கால நிகழ்வுகள்**

இவற்றில் வரலாற்று நிகழ்வுகள் எல்லாம் கடைசிக்கால நிகழ்வுகளுக்கு முன்னடையாளமாக இருக்கின்றன. அதாவது, பழைய ஏற்பாட்டு வரலாற்றில் நிகழ்ந்தவற்றை ஆராயும்போது, நமக்கு என்ன நிகழக்கூடும் என்பதை அறிய முடிகிறது, அல்லவா? தானியேல், வெளிப்படுத்தல் புத்தகங்களுக்கும் இந்த நியதி பொருந்தும்.

**மேலே நாம் விவாதித்த நியதியை 1கொரி 10:1–11இல் எவ்வாறு காணமுடிகிறது?**

சென்ற வாரம், தானியேலில் சில சம்பவங்களைப் பார்த்தோம். தானி 3:6,15,27; 6:6-9,21,22. குறிப்பிட்ட ஓரிடத்தில் நிகழ்ந்த வரலாற்றுச் சம்பவங்கள் அவை; ஆனால் வெளிப்படுத்தலில் சொல்லப்படும் கடைசிக் கால நிகழ்வுகளை ஓரளவுக்கு அவை பிரதிபலிக்கின்றன. இந்தச் சம்பவங்களை வாசிக்கும்போது, கடைசிக் காலத்தில் தேவபிள்ளைகளுக்கு பெரிய அளவில் நடக்கப்போவதை அறியமுடிகிறது. முக்கிய விஷயம் என்ன தெரியுமா? இப்போது நாம் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும் இறுதி வெற்றி நமக்குதான். வெளிப்படுத்தல் சொல்லும் விஷயங்களில், **'வெற்றி குறித்து நிச்சயமாக இருங்கள்'** என்கிற உறுதி அளிக்கப்படுகிறது.

வெளி 1-11 அதிகாரங்களில் வரலாற்றுப் பகுதியும், அதைத் தொடர்ந்து 13-22 அதிகாரங்களில் கடைசிக்கால நிகழ்வுகளும் காணப்படுகின்றன: சில விதிவிலக்குகளும் உள்ளன.

**வெளி 12:1–17இல் சொல்லப்படுவது வரலாற்று நிகழ்வா? கடைசிக்கால நிகழ்வா? எப்படி?**

இரு அம்சங்களுமே இந்த அதிகாரத்தில் உள்ளன. எப்படி?

1. *குழந்தை இயேசுவை சாத்தான் தாக்கியதைப்பற்றியும் (வெளி 12:4), சாத்தானைப் பரலோகத்திலிருந்து வெளியேற்றியதைப்பற்றியும் (வெளி 12:7-9), வரலாற்றில் சபைக்கு உண்டான உபத்திரவத்தைப்பற்றியும் (வெளி 12:14-16) பார்க்கிறோம்.*
2. *அதைத் தொடர்ந்து, கடைசிக்கால மீதமான மக்கள்மேல் சாத்தான் தொடுக்க இருக்கும் தாக்குதலைப்பற்றிப் பார்க்கிறோம். வெளி 12:17.*

வரலாற்றிலிருந்து எவரும் பாடம் கற்றுக்கொள்வதில்லை என்று சொல்வார்கள். அதாவது, எந்தக் காலக்கட்டத்தில் வாழ்கிறவர்களாக இருந்தாலும், ஒரேவிதமான தவறுகளை தொடர்ந்து செய்கிறார்கள். ஏராளமான வரலாற்று சம்பவங்கள் அதற்குத் திருஷ்டாந்தங்களாக உள்ளன. அதே தவற்றை நாமும் செய்யாமல் இருக்க, நாம் என்ன செய்யலாம்?

திங்கள், ஏப்ரல் 16

## இயேசுவைப்பற்றிய உருவகங்கள்

கீழுள்ள வசனங்களில் இயேசுவின் பெயர்களும் அவரைப்பற்றிய சித்தரிப்புகளும் உள்ளன. அவர் என்ன செய்திருக்கிறார்? என்ன செய்கிறார்? என்ன செய்யப்போகிறார்?

**கீழுள்ள வசனங்கள் இயேசுவைப்பற்றிச் சொல்வது என்ன?**

*வெளி 1:5* ______________________________

______________________________

*வெளி 1:18* ______________________________

______________________________

*வெளி 5:8* ______________________________

______________________________

*வெளி 19:11-15* ______________________________

______________________________

*வெளி 21:6* ______________________________

______________________________

இயேசுவின் பல்வேறு பணிகளையும் செயல்பாடுகளையும் வெளிப்படுத்தலில் சுட்டிக்காட்டும் வசனங்களில் இவை ஒரு சிலதாம். அவர் ஆட்டுக்குட்டி என்பது அவருடைய முதலாம் வருகையைச் சுட்டிக்காட்டுகிறது; நம் பாவங்களுக்கான பலியாக அவர் அடிக்கப்பட்டார். 'நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே.' 1கொரி 5:7. அவர் 'மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்' என்று சொல்கிறார். வெளி 1:18. எனவே, அவர் மரித்ததையும், மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்ததையும் அது சுட்டிக்காட்டுகிறது. 'கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது' லூக் 24:46. இறுதியாக, அவருடைய இரண்டாம் வருகைபற்றி வெளி 19:11–15 சொல்கிறது. உலகத்தாரை நியாயந்தீர்க்க வல்லமையோடும் மகிமையோடும் அவர் திரும்பிவருவார். 'மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்; அப்பொழுது, அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்.' மத் 16:27.

இயேசுவின் வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல், இரண்டாம் வருகை ஆகியவற்றை மையமாக வைத்தே நாம் வாழவேண்டும்; ஒழுக்கத்தீர்மானங்களைச் செய்யவேண்டும். இவை ஏன் அவசியமாக இருக்கிறது?

செவ்வாய், ஏப்ரல் 17

## வெளிப்படுத்தலில் ஆசரிப்புக்கூடாரக் கருத்து

வெளிப்படுத்தலில் இரு முக்கிய பிரிவுகள் உள்ளன என்று பார்த்தோம்:

**1 வரலாற்று நிகழ்வுகள்** **2 கடைசிக்கால நிகழ்வுகள்**

இந்த இரு பிரிவுகளுக்குள்ளும் பரவிக்கிடக்கிற **மையக்கருத்தாக** எபிரெய ஆசரிப்புக்கூடாரம் உள்ளது.

பூலோக ஆசரிப்புக்கூடாரத்தில், பிராகாரத்திலிருந்த தகனபலீபீடத்தில் மிருகங்களைப் பலியிட்டார்கள். சிலுவையைச் சுட்டிக்காட்டிய பலிமிருகத்தைப் பலியிட்ட பிறகு, ஆசரிப்புக்கூடாரத்தின் முதல் அறைக்குள் ஆசாரியன் செல்வான்; இயேசு பரலோகம் சென்றபிறகு, பரலோகப் பரிசுத்த ஸ்தலத்திற்குள் அவர் பிரவேசித்ததற்கு இது முன்னடையாளமாக இருந்தது. குத்துவிளக்குகளின் மத்தியிலே இயேசு உலாவுகிற காட்சி இதைத்தான் உணர்த்துகிறது. வெளி 1:13.

**வெளி 4:1,2இல் திறக்கப்பட்டிருந்த வாசல் எதைச் சுட்டிக்காட்டுகிறது. அந்தச் சம்பவம் எங்கே நடக்கிறது? அப் 2:33; 5:31: எபே 1:20,21; எபி 10:12,13; சங் 110:1; வெளி 12:5.**

---

---

இயேசு பரலோகத்திற்குச் சென்றதுமே, இந்த முதலாம் வாசல்வழியாக பரலோகப் பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்றார். வெளிப்படுத்தல் புத்தகம் கிறிஸ்துவைக் காட்டும் முதல் காட்சியில், பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தின் முதல் அறையிலுள்ள குத்துவிளக்குகளின் மத்தியில் அவர் நிற்பதாகச் சொல்கிறது. வெளி 1:10-18.

**தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டதும் உடன்படிக்கை பெட்டியை யோவான் பார்க்கிறார். வெளி 11:19. பூலோக ஆசரிப்புக்கூடாரத்தில் இரண்டாம் அறையில்தான் உடன்படிக்கை பெட்டி இருந்தது; அப்படியானால் இந்த உண்மை சுட்டிக்காட்டும் செய்தி என்ன? லேவி 16:12–14.**

---

---

பரலோக ஆசரிப்புக்கூடாரத்தில் உடன்படிக்கை பெட்டி காணப்பட்ட இடம் மகாபரிசுத்த ஸ்தலம்; அதாவது, இரண்டாம் அறை. வெளிப்படுத்தலில் நமக்கு ஆறுதலான விஷயம் என்ன? இரண்டு அறைகளிலுமே இயேசு ஊழியம் செய்கிறார்; அதுதவிர, பரலோக நிகழ்வுகளும் பூலோக நிகழ்வுகளும் ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்டுள்ளன. வெளிப்படுத்தல் சொல்வதுபோல, கடந்த காலத்தில் பாடுகள் இருந்திருக்கலாம்; கடைசிக்காலங்களில் பாடுகள் உண்டாகலாம். ஆனால், 'கர்த்தருடைய நாளுக்காக நிற்கக்கூடிய மக்களை ஆயத்தப்படுத்தும் பணியில் பரலோகம்முழுவதும் ஈடுபட்டிருக்கிறது. பரலோகத்திற்கும் பூமிக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது தெரிகிறது.' – *EGW, ML, p 307.*

## வெளிப்படுத்தலில் கிறிஸ்து: பகுதி I

வெளிப்படுத்தலின் அமைப்பு, கருத்து என அனைத்திலும் ஒரே விஷயம் தான் மையமாக உள்ளது; இயேசு கிறிஸ்துவை வெளிப்படுத்துவதுதான் அது. ‘இயேசுகிறிஸ்து ... வெளிப்படுத்தின விசேஷம்’ என்று அப்புத்தகம் ஆரம்பிக்கிறது.

1 **‘இயேசு கிறிஸ்து தந்த வெளிப்பாடு’** அல்லது

2 **‘இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சி’** என்று இதைச் சொல்லலாம். வெளி 1:2.

வெளிப்படுத்தலைப் புரிந்துகொள்வது கடினம் என்று சிலர் சொல்கிறார்கள்; வெளிப்படுத்தப்பட்ட ஒன்றைப் புரிந்துகொள்வது எவ்வாறு கடினமாக இருக்கமுடியும்? இப்புத்தகத்தைப் புரிந்துகொள்ளமுடியாது என்றால், இதை வேதாகமத்தில் ஆண்டவர் சேர்த்திருப்பாரா?

**வெளி 1:1–8 வசனங்கள் இயேசுவைப்பற்றி என்ன சொல்லுகின்றன?**

**‘கிறிஸ்து பூமியின் ராஜாக்களுக்கு அதிபதி’** என்று வெளிப்படுத்தல் புத்தகத்தின் துவக்கம் சொல்கிறது. **‘ராஜாதி ராஜா’** என்று அப்புத்தகத்தின் முடிவு சொல்கிறது. வெளி 19:16. இங்கு நமக்குள்ள நற்செய்தி என்ன தெரியுமா? ‘பூமியின் குழப்பங்களுக்குமத்தியிலும், **நம் அன்புள்ள இரட்சகரிடம்தான் இறுதி அதிகாரம் இருக்கிறது’** என்பதுதான் அந்த நற்செய்தி.

கிறிஸ்துவே நம் மீட்பரென வெளி 1:6 தெளிவாகச் சொல்கிறது. ‘தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவினவர்.’ சிலுவையில் அவர் நமக்காகப் பலியானதை இவ்வசனம் சுட்டிக்காட்டுகிறது. அவர் நம்மைக் கழுவினது மட்டுமல்லாமல், பரிசுத்தப்படுத்தியும் இருக்கிறார். 1கொரி 6:11. இப்படிப் பட்ட வசனங்கள்தாம் இரட்சிப்பின் நிச்சயத்தை நமக்குத் தருகின்றன; ஏனென்றால், இயேசுவே நம் பாவங்களைக் கழுவுகிறவர் என்பதை அவை நமக்குக் காட்டுகின்றன. நமக்குநாமே இதைச் செய்துகொள்ளவே முடியாது.

**இயேசுவைப்பற்றி வெளிப்படுத்தல் 1:7 என்ன சொல்லுகிறது?**

‘மேகங்களுடனே’ கிறிஸ்து வரப்போகிறார் என்கிற வாக்குறுதிதான் ஒட்டுமொத்த கிறிஸ்தவ விசுவாசத்திற்கும் மையமாக இருக்கிறது. இயேசு நேரடியாக மீண்டும் வரப்போகிறார்; உலகத்தார் அனைவரும் அதைக் காணப் போகிறார்கள். சகல உபத்திரவங்களும் குழப்பங்களும் அழிவுகளும் அதன் பிறகு இருக்காது. நித்தியவாழ்வு குறித்த வாக்குறுதிகள் யாவும் நிறைவேறும்.

இயேசுவைப்பற்றி வெளிப்படுத்தல் **1:8** என்ன சொல்லுகிறது? இப்போது நாம் எப்படிப்பட்ட பாடுகளை அனுபவித்துக்கொண்டிருந்தாலும், இந்த வசனம் நமக்குத் தருகிற நம்பிக்கை என்ன?

வியாழன், ஏப்ரல் 19

## வெளிப்படுத்தலில் கிறிஸ்து: பகுதி 2

**வெளிப்படுத்தல் 1:10–18இல் இயேசு தம்மைப்பற்றி என்ன சொல்லுகிறார்?**

இந்த வசனங்களின்படி, பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தின் முதலாம் அறையில் இயேசு இருக்கிறார். இயேசு செய்கிற வேலை என்னவென்று புரிந்ததும் யோவானுக்குப் பயமுண்டாக்கிறது; இயேசுவின் பாதத்தில் விழுகிறார். ஆறுதலின் நாயகன் இயேசு, ‘‘பயப்படவேண்டாம்’’ என்கிறார்; மேலும், தம்மைப்பற்றி ‘நான் அல்பாவும் ஓமெகாவும், முந்தினவரும் பிந்தினவரும்’ என்கிறார். வெளி 1:11. தாம் நித்திய தேவனாக இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார். பிறகு, தமது மரணத்தைப்பற்றியும், உயிர்த்தெழுதலைப்பற்றியும், அந்த உயிர்த்தெழுதல் பெற்றுத்தரும் நம்பிக்கைபற்றியும் கூறுகிறார். ‘மரணத்திற்கும் பாதாளத்திற்கு முரிய திறவுகோல்களை உடையவர்’ இயேசு. அதாவது, மார்த்தாளுடைய சகோதரன் மரித்தபோது, ‘நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா?’ என்று கேட்டார். தாம் சொன்ன அதே கருத்தை இங்கு யோவானிடமும் சொல்கிறார். மார்த்தாளிடம் இயேசு சொன்னதை எழுதியவரும் இதே யோவான்தான். யோவான் 11:25,26.

மார்த்தாளுக்கும் யோவானுக்கும் உயிர்த்தெழுதல் நம்பிக்கையை இயேசு கொடுத்தார். கிறிஸ்தவ விசுவாசத்தின் முழு நிறைவேறுதல் இந்த நம்பிக்கை. இந்த நம்பிக்கை இல்லையென்றால், வேறு நம்பிக்கைகளால் என்ன பயன் இருக்கமுடியும்?

**வெளிப்படுத்தல் 22:7,12,13 இயேசுவைப்பற்றி என்ன சொல்லுகிறது?**

---

‘கிறிஸ்து இயேசுவே அல்பாவும் ஓமேகாவுமாக இருக்கிறார்; இயேசுவே பழைய ஏற்பாட்டின் ஆதியாகமம்; புதிய ஏற்பாட்டின் வெளிப்படுத்தலும் இயேசுவே. இரண்டு ஏற்பாடுகளுமே கிறிஸ்துவில் சங்கமிக்கின்றன. இரண்டாம் ஆதாம் கீழ்ப்படிந்ததால், முதலாம் ஆதாம் தேவனோடு ஒப்புரவாக முடிந்தது; சாத்தானின் சோதனைகளை இரண்டாம் ஆதாம் மேற்கொண்டு, முதலாம் ஆதாமின் மோசமான தோல்வியை நிவிர்த்திசெய் தார்.’ – *EGW, 6SDABC, p 1092,1093.* ஆம், இயேசுவே ஆரம்பமும் முடிவுமாக இருக்கிறார். அவர் ஆதியில் நம்மைச் சிருஷ்டித்தார்; இறுதியில் நம்மைத் திரும்பவும் சிருஷ்டிக்கப் போகிறார்.

வெளிப்படுத்தல் புத்தகத்தில் ஆரம்பம்முதல் இறுதிவரை வரலாறும், முடிவுகால நிகழ்வுகளும் சொல்லப்பட்டாலும், அது கிறிஸ்துவை வெளிப்படுத்துகிற புத்தகம். இறுதி நிகழ்வுகள்குறித்து நாம் என்னதான் ஆராய்ந்தாலும், இயேசு கிறிஸ்துதான் எல்லாவற்றிற்கும் மையமாக இருக்கவேண்டும்.

ஒவ்வொரு நாளும் நாம் எவ்வாறு இயேசுவை நம் வாழ்க்கையின் மையமாக வைக்கமுடியும்?

## மேலும் படிக்க:

தேவனைப்பற்றிய ஆழமான விஷயங்கள் வெளிப்படுத்தலில் உள்ளன. இந்தப் புத்தகத்தை ‘வெளிப்படுத்தல்’ என்று அழைப்பதால், இது முத்தரிக்கப்பட்ட புத்தகம் அல்ல என்பது உறுதிதியாய்த் தெரிகிறது. வெளியரங்கமாக்கப்பட்ட புத்தகம்தான் வெளிப்படுத்தல். இந்தப் புத்தகத்திலுள்ள மறைபொருட்களை தேவன்தாமே தம் தாசனுக்கு வெளிப்படுத்தினார்; வாசிக்கிற அனைவரும் அதைப் புரிந்து கொள்ளவேண்டும் என்பதே அவருடைய திட்டம். யோவானின் நாட்களில் வாழ்ந்தவர்களுக்கு வேண்டிய சத்தியங்கள் இதில் இருந்தன; இவ்வுலக வரலாற்றின் கடைசி நாட்களில் வாழ்கிறவர்களுக்கு வேண்டிய சத்தியங்களும் இதில் உள்ளன. இந்தத் தீர்க்கதரிசனத்தின் சில சம்பவங்கள் கடந்தகாலத்தில் நிகழ்ந்தன; சில இப் போது நடக்கின்றன; சில அந்தகார வல்லமைகளுக்கும் பரலோகப் பிரபுவுக்கும் இடையே நடக்கிற மாபெரும் போராட்டம் இறுதிக் கட்டத்தை நெருங்கிவிட்டதைக் காட்டுகின்றன; வேறு சில மீட்கப்பட்டவர்கள் புதிய பூமியில் வெற்றிக்களிப்புடன் காணப்படுவதை வெளிப்படுத்துகின்றன.’ - *EGW, AA, p 584.*

வெளிப்படுத்தலின் ஆரம்பத்திலும் முடிவிலும் நாம் பார்த்த வசனங்கள் எல்லாம் இயேசுவையே அதிகம் வெளிப்படுத்துகின்றன. அப்புத்தகத்தில் மேற் கோள் காட்டப்படும் பழைய ஏற்பாட்டு வசனங்கள் எல்லாமே வரலாற்று நிகழ்வு களைச் சுட்டிக்காட்டினாலும், அவைமூலமாக ஆண்டவராகிய இயேசுவைத்தான் வெளிப்படுத்தல் புத்தகம் முன்வைக்கிறது. உதாரணமாக, வெளி 3:14; 5:5,6,7; 7:14; 19:11-16. இந்த வசனங்களை ஒன்றுசேர்த்து ஆராய்ந்தால், இயேசுவைக் குறித்த விளக்கமான வெளிப்பாட்டைக் காணலாம்; அவர் பிள்ளைகளெனச் சொல்லிக் கொள்ளும் நமக்கு, அவர் எவ்வளவு முக்கியமானவர் என்பது புரியும்.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *புதிய ஏற்பாடு முழுவதிலும் அடிக்கடி பழைய ஏற்பாட்டு வசனங்கள் மேற்கோள் காட்டப்படுகின்றன; இதிலுள்ள முக்கியத்துவம் என்ன? “நம் விசுவாசம் எவ்வளவுக்கு வேதாகமத்தில் புதைந்திருக்கவேண்டும்? நாம் எவ்வளவுக்கு தேவவார்த்தையில்சிரத்தைக் காட்டவேண்டும்?” என்பதுபற்றி என்ன புரிகிறது? நம் தனிப்பட்ட வாழ்க்கையாக இருந்தாலும், சபை வாழ்க்கையாக இருந்தாலும், வேதாகமத்தின் அதிகாரத்தைக் குறைக்கமுயல்கிற வல்லமைகளுக்கு எதிராக எவ்வாறு நம்மை நாம் பாதுகாக்கலாம்?*

2. *வெளிப்படுத்தல் புத்தகத்தை வாசித்து, இயேசுவைப்பற்றிச் சொல்லும் வசனங் களை எல்லாம் பட்டியலிடுங்கள். வகுப்பில், அந்த வசனங்களைச் சத்தமாக வாசியுங்கள். நம் ஆண்டவரின் தன்மை, ஊழியம், வல்லமை, குணம்பற்றி அந்த வசனங்கள் வேறு என்ன சொல்கின்றன? இதிலிருந்து எப்படிப்பட்ட ஆறுதலை நாம் பெறலாம்?*

3. *இந்த உலகம் மரண சாபத்திற்கு உட்பட்டது; மரணத்திலிருந்து விடுதலை உண்டு என்கிற வாக்குறுதியிலிருந்து எவ்வாறு நாம் நம்பிக்கையும் ஆறுதலும் பெறலாம்?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. **YOUTUBE** க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள்.

HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. **YOUTUBE** க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,

ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*